Koviloor Digital Library


உ

ஓம் தத் சத்.

ஸ்ரீ பரப் பிரஹ்மனே நம :

ஸ்ரீலஸ்ரீ இராமசாமி ஞான தேசிக சுவாமிகள் அருளிய

"அருள் மொழிகள் 120"



ஸ்ரீலஸ்ரீ இராமசாமி சுவாமிகள்

இஃது

குமாரபாளையம் எடப்பாடி ரோட்டிலிருக்கும்
ஆனந்தாஸ்ரமத்தின் முதலாவது தலைவர்

ஸ்ரீலஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமி

அவர்களின்

9-வது ஆண்டு குருபூஜையில் 2-வது தலைவர்
திரு. V. R. S. இராமசாமி செட்டியார்
... இலவசமாக வெளியிடப்பட்டது.

... ஆறும் பாகம்

... தேதி 1-6—1989 வியாழக்கிழமை
... வைகாசி மீ 19ஆம் தேதி

Acc. No: 2431
65
2431

Koviloor Digital Library

Koviloor Digital Library

2421 900 6-1

ஸ்ரீ ராமஜெயம்

முன்னுரை.

நம் ஆனந்தாஸ்ரம நிறுவனர் ஸ்ரீலஸ்ரீ இராமசாமி சுவாமிகளின் அருள் மொழிகள் சிறு கையடக்கப் பதிப்பு களாக வெளியிடப்பட்டு வருவதில் 120 அருள் மொழிகள் கொண்ட இப்பதிப்பு 6ம் பாகமாகும். நமது முதல் தலைவர் ஸ்ரீலஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமிகளின் 9ஆம் ஆண்டு குரு பூஜையின் போது இது வெளியிடப்படுகிறது.

KOVILOOR MADALAYAM KOVILOOR - 630 307 (NEAR) KARAIKUDI (PHONE : 24696)

தவத்திரு சுவாமிகளின் அருள் மொழிகள் அற்புத மானவை, அமுதத்துளிகள் போன்றவை. அனுபவ அறிவாக வெளிப்பட்டிருப்பமையின் கற்போரின் அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் ஆற்றல் பெற்றவை. வள்ளுவனார் செய் தருளிய பொய்யாமொழிபோல் எஞ்ஞான்றும், எவ்விடத் தும் எவர்க்கும் மிகுந்த நற்பயனை விளைவிப்பவை. காமதேனு கற்பகத்தரு, சிந்தாமணி ஆகியவற்றின் தன்மை கொண் டவை. ஆன்மீகத்தின் அரிச்சுவடியை ஆரம்பித்திருப்பவர்க் கும் இவற்றிலே அரவணைப்புண்டு; மயர்வற மதிநலம் பெற்று உயர்வற உயர்ந்துவிடும் நிலையிலிருப்போர்க்கும் இங்கே அருள் வழிகாட்டுதலுண்டு. மேலும் "தீய குணங்களின் இலக்கணமும் இதனால் கெட்டவர்கள்" நல்ல குணங்கள், "பயமும் அபயமும்", மாணிக்கவாசகர் பாடல்களில் சிலவும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆன்மீகத்துறை என ஒன்றுண்டு என்ற அறிவில்லாம லேயே இவ்வுலகில் உடற்சார்ந்த வாழ்க்கையையே மெய் யெனக்கொண்டு உணர்வு வழி வாழ்பவர்களை முட்டாள்கள் எனின், ஆன்மீகச்செல்வம் பற்றி ஆன்றோர்கள் பலர் சொல்ல செவி வழியே கேட்டும் நூல்பல படித்தும், அந்நெறி முறை களைச் செய்கையிலும் நடைமுறை வாழ்விலும் கடைப்பிடிக் காது காலங்கழிப்பவர்கள் படு முட்டாள்கள், மூடர்கள் ஆவர். தெய்வப்புலவரும் "ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத் தும் தானடங்காப் பேதையிற் பேதையார் இல்'' என்கிறார். இத்தகு பேதையிற் பேதையாக வாழும் என் போன்றோரை யும் தாங்கும் கருணை வள்ளலாக விளங்குகிறார் நமது ஆஸ்ரம சுவாமிகள் தவத்திரு. சோம. கோபாலசாமி சுவாமிகள். குருநாதரின் தடுத்தாட் கொள்ளும் தன்மையின் பயனாகவே இம் முன்னுரை எழுதும் ஈடிலாப் பேறு எனக்குக் கிட்டியுள்

Koviloor Digital Library

ளது. அன்னாரின் பாத கமலங்கள் என்றும் என் நெஞ்சில் நிலைத்திருக்க ஆண்டவர் அருள் புரிவாராக!

நமது ஆனந்தாஸ்ரமத்தை முதல் தலைவரும், என் பெரிய தந்தையாருமாகிய **ஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமிகள்,** நெரூர் தவத்திரு. **சதாசிவானந்தா சுவாமிகளின்** அருள் வழி காட்டுதலின்படி மாதாந்திர அந்தர்யோகங்களும் வேதாந்த வகுப்புகளும், இறைவழி பாடுகள் முறையாகத் தொடர்ந்து நடத்தினதின் மூலம் திடம்பெறச் செய்தார். அவர் வழியே நின்று இன்றைய தலைவரும் என் தந்தையாருமாகிய உயர்திரு. **V. R. S. இராமசாமி செட்டியார்** அவர்களும் ஆஸ்ரமப் பணிகளில் தன்னை மிகுதியாக ஈடுபடுத்திக் கொண்டு கோவிலூர் மரபு **சோம. கோபாலசாமி சுவாமிகளின்** மூலம், தினசரி கோவிலூர் சம்பிரதாய வேதாந்த பாடம் நடத்துதலும், ஸ்ரீ ஆதிசங்கரர் முதலான குரு மூர்த்தங்களுக்குத் தினசரி பூஜை வழி பாடுகளும், நான்கு ஆண்டுகளாக ஸ்ரீ ஆதிசங்கர ஜயந்தி விழாவும், நெரூர் **ஸ்ரீ தேஜோ மயானந்தா சுவாமிகளின்** மூலம் மாதாந்திர அந்தர்யோகங்கள் முதலியன செயல்களை ஆற்றி வருகின்றார். பள்ளி மாணாக்கரின் ஆன்மீகப் பயிற்சி முகாம்களும், ஆன்மீக நூல்கள் பதிப்பித்தலும், ஏனைய பிற நற்காரியங்களும் அவர் தம் அனுமதியினாலே நடைபெறஏதுவாகி உள்ளன அவருக்கு என் ஆழ்ந்த வணக்கங்களும் நன்றியும் உரித்தாகுக! ஆஸ்ரம உதவித்தலைவர் உயர்திரு. **J. K. K. முனிராஜா** அவர்களும், மற்றும் ஏனைய ஆஸ்ரம அன்பர்களும் அன்புமிகுந்து அரும் பணி ஆற்றி வருகின்றார்கள். காவேரி நகர் அன்பர் திரு. **G. நித்தியானந்தம்** B. Sc., அவர்களும் இந்நூல் பதிப்பிக்கும் பணிகளிலும் மற்றும் பல ஆஸ்ரமப்பணிகளிலும் உவகையுடன் உதவி புரிகிறார். மேற்கண்ட அனைவர்க்கும் என் நன்றியைச் சமர்ப்பிக்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் நம்மை என்றும் மேலான ஆன்மீகப் பணிகளில் ஈடுபடுத்திக் காக்க இறைஞ்சுகிறேன்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

7—6—89
குமாரபாளையம்

R. S. ராஜு B.E.
உரிமையாளர்,
ஸ்ரீ ஆண்டாள் & கம்பெனி.

Koviloor Digital Library

6-1

ஓ

அறிவிப்பு.

குமாரபாளையம் எடப்பாடி ரோட்டிலிருக்கும் நமது ஆனந்தாஸ்ரமத்தில், கோவிலூர் மரபு தவத் திரு. சோம கோபால சுவாமி அவர்களால், மாலை 7-00 To 8-00 மணிவரை தினந்தோறும் கோவிலூர் மடம் வேதாந்த சம்பிரதாய பாடங்களான, 1. நாநா ஜீவ வாதக் கட்டளை, 2. கீதா சாரத் தாலாட்டு 3. சசிவன்ன போதம், 4. மகாராஜாத் துறவு 5. வைராக்கிய சதகம், 6. வைராக்கிய தீபம் 7. இலட்சணு விருத்தி, 8. வேதாந்த சூடாமணி 9. கைவல்லிய நவநீதம், 10 விவேக சூடாமணி 11. ஸ்ரீமத் பகவத் கீதை, 12. ஸ்ரீமத் ஈசுவர கீதை 13. ஸ்ரீமத் பிரம்ம கீதை, 14. அஞ்ஞவதைப் பரணி 15. பஞ்சதசி, 16. ஸ்ரீஞான வாசிட்டம், ஆகிய 16 சாஸ்திரங்களும், வரிசைக் கிரமமாக நடத்தப் படுகின்றன.

ஆன்மீக நாட்டமுள்ள அனைவரும் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு அறம், பொருள் இன்பம், வீடு என்னும் புருஷார்த்த இலட்சியங் களில் முக்கிய இலட்சியமான சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தி ரூபப் பயனும் வீடு பெற்றுய்யு மாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

J. K. K. முனிராஜா

J. K. K. முனிராஜா,
M. Tech., (London, U. K.)
பெரும் தொழில் அதிபர்,
உப தலைவர், ஆனந்தாஸ்ரமம்,
குமாரபாளையம் - 638 183.


கோவிலூர் ஆதீனம்
2431
R65
கோவிலூர்-630 307

Koviloor Digital Library

குமாரபாளையம்

ஆனந்தாஸ்ரமம்

முதலாவது தலைவர்



ஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமிகள்

அவதாரம்: 1901 மகா சமாதி: 9-6-1980

Koviloor Digital Library

சிவமயம்

ஓம் தத் சத்

ஸ்ரீ பரப் பிரம்மனே நம:

அருள் மொழிகள் 120

ஸ்ரீ அப்பர் அருள்வாக்கு

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளுந் துன்ப மில்லை.
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே,

1. கடமுண்டாகும் போதே அதனுள், ஆகாயம் நிரம்பி நிற்கின்றது. அது பிரயத்தனத்தாலானதல்ல, சுபாவசித்தமாம். ஆனால், அக் கடத்தில் ஜலம், அரிசி முதலியவை நிரம்பிய போது ஆகாயம் இல்லாதது போல அவிவேகிக்குத் தோன்றுகிறது. அவைகளை முயற்சியால் எடுக்கப்படின் சேஷித்திருப்பது நின்மல ஆகாயம். சித்தமுள்ள இடமெல்லாம் சுபவா சித்தமாக சிதானந்த ஆன்மா நிறைந்துள்ளது. அச் சித்தத்தில் இராகத் துவேஷாதி அஞ்ஞன்ம சர்மான்களின் சம்ஸ்கார வடிவ குப்பையாகிய சாமான்கள் நிறைந்துள்ள போது, ஆன்மா ஆனந்த வடிவமாக இருந்தும், அவிவேகிகளுக்கு இல்லாதது போல் தோன்றுகிறது. அப்பியாச வலியால் களைந்தெரிந்த போது சுபாவமாகச் சித்தத்துள் ஆனந்த வடிவ ஆன்மா உள்ள அப்போது அனுபவமாகின்றது.

2. மோர்வார் தேசத்து இராஜ ஸ்திரீகள், தங்கள் சாதியின் இயல்பான வீரத்தாலும், கற்பின் சிறப்பாலும், தங்கள் ராஜ்ஜியம் நிலை குலையும் படியாயும், தங்கள் கணவன்மார் உயிர் விடும்படியாயும் நேர்ந்த போது, வீரத்தோடு சிலர் ஆயுதம் தாங்கி யுத்த களத்திலும் அக்கினியிலும் இறந்து சந்தோஷித்தார்கள். உத்தம அதிகாரியும் அவர்களைப் போன்று அஞ்சாத நெஞ்சுடையராய், விஷய வாசனை சத்துருக்களோடு போர் புரிந்து இறக்கவேண்டும். அல்லது

Koviloor Digital Library

சிவாஜியைப் போல வெற்றி பெற்று அகண்டானந்த ஆன்ம பூமிக்குரிய அரசனாக வேண்டும்.

3 ஓர் குரங்கு மரத்தின் மேலிருந்து கொண்டு தன் சாயை யைப் பூமியில் கண்டு அதனைத் தானென்றபிமானித்துச் சில சாகஸங்களைச் செய்தது. அதனை அங்கிருந்து பார்த்துவந்த புலி உபாயத்தால் அதனைத் தின்னவேண்டி குரங்கின் சாயை யின் மேல் பாய்ந்தது. குரங்கு, தன் மேல் விழுந்ததாகப் பயந்து, கீழே விழுந்தது. உடனே புலி, குரங்கைச் சுலப மாகப் பிடித்துத் தின்றது. மனிதன், தூல தேகத்தை அபி மானிப்பதும், எமனுக்காளாவதும் இது போன்றதேயாம்.

4. அழகான பொருளொன்று அனுத்மாவில் ஒன்றுமில்லை. ஆரம்பத்தில் எஜமானன் சொற்படி பணியாளன் நடந்து பழகிவிட்டால், பின்னர் பணியாளன் திருத்தமும் ஒழுக் கமும் உடையவனாகிறான். அதனால், பணியாளன் சொன்ன படியும் எஜமானன் நடந்து கொள்ளுவான்.

5. 'அறிவுடமை' மாநிலத்தில் மிக்க செல்வமென்றனர். அவ் வறிவு யாதெனின் பதார்த்தங்களை உள்ளபடி அறித லாம். விவேகமில்லாத தியானம் செய்பவர், குருட்டுப் பிறவியினர் ஆவர்.

6. கல்வியற்றவனானாலும் கல்வியுடையவனானாலும் பொருள் தேடும் வகைதெரிந்து ஒழுகினால் அவர்களுக்கும் பொருள் கிடைக்கின்றது. ஞானமும், கல்வியுடையவர், அல்லாதார் இருபாலரும் ஆன்ம நேயத் தியான விசாரங்களால் அவசியம் அடைகின்றனர்.

7. பாரமான சுமையைத் தூக்கிச் செல்பவன், அச்சுமை தனதல்ல வென்று உணர்ந்தால், ஒரு நொடிப் போதும் அதைச் சுமக்க மாட்டான். சுக துக்க முதலிய அல்லல் சுமை களை சுமப்பவன், அவ்வல்லல் யாருடையது? என்று தெரிந்து விட்டால், பின்னர் அவ்வல்லலோடு சேர மாட்டான்.

8 அன்னத்தை இலையில் படைத்துக் கடவுளாகக் கருது கின்றனர், அல்லது கடவுளுக்கு அர்ப்பணிக்கின்றனர். அந்த அன்னமே மலமான பின், முன்னிருந்த எண்ணத்திலும் அதிக

Koviloor Digital Library

மாறுதலுடையராக எண்ணுகின்றனர். என்ன காரணம்? அம் மலத்தின் பாகத்தில் சீவர்களது அபிமானம் இல. மனக் கூறு சம்பந்தப் பட்டிருப்பதால்தான்.

9. பழுக்கக் காய்ச்சிய இரும்பின் ஒளி, சில நிமிஷங்களில் சாமானிய அக்கினியாக மறைவதுபோல, ஞானிகள் விதேக முத்தியில் பிரஹ்ம மயமாகின்றனர்.

10. பிறப்பதும் இறப்பதும் இறைவனது லீலையாக இருக்க, இவைகளைத் தம்முடையதாகவும் தம்முடைய இஷ்டப்படி வாழ முடியுமென்றும் எண்ணி ஏமாந்து, இறைவன் தாண்டவ லீலையில் மரணமாகும் ரோதனம் செய்கின்றனர். இது எவ்வளவு அறியாமை! உண்மையை யறிவது வெகு கடினமாகின்றது.

11. பாம்பின் உறவு யாருக்கும் சுக ஏதுவாகாதது போல பெண், பொன்னின் அபிமானமுடைய விவேகி, அவிவேகி யாவருக்கும் சுக ஏதுவாகாது. ஆனால், பாம்பின் விஷம் ஒரு ஜென்மத்திலேயே முடிந்து விடும். பெண், பொன் விஷய வாசனையாகிய விஷம், அனேக ஜன்மங்களைக் கொல்லும்.

12. ஜலத்தினுள் எவ்வளவு காலம் இருப்பினும் பாசி வேர் கொண்டு பூமியில் ஊன்றிநிற்காது. அறிவீனர்களுக்கு ஞான மார்க்கங்களைப் போதிப்பினும் நன்றாக மனதில் பதியாது. சிவக் கிருபையும் புண்யமும் உள்ளவருக்குத்தான் அது பலன் தரும்.

13 சந்நியாசி; பொன், பெண் என்ற இரண்டையும் அடியோடு தள்ளி, அவைகளின் வாசனையையும் நாசம் செய்வதால், மிக்க சாந்தியும் அதனால் தடையின்றி பிரஹ்மானந்தானுபவமும் உண்டாகின்றது.

14. எத்தனை எத்தனை நீத்தாயகிலத்தைப் பரஞ்சுடராய் எறிக்குஞ் சோதி, அத்தனை அத்தனைத் தோன்றுமென நூற் கருத்தை அதிகாரி அடிக்கடி சிந்திக்க வேண்டும்.

15. கருமிக்கு இவ்வுலகமும் விண்ணுலகமும், தனி விரக்

Koviloor Digital Library

தனுக்கு விண்ணுலகமும், முமூக்ஷுவிற்கு ஞானமும், ஞானிக்கு மோக்ஷமும் பயனுகும்.

16. உலகிலுள்ள சகல பொருள்களின் விசித்திர உருவமும் மனத்தின் பரிணுமமே யாகும். ஆனதால், விவேகி, வேருெரு பொருளைப் பொருளாகக் கொண்டு பார்க்கவோ ருசிக்கவோ திடசங்கல்பஞ் செய்யமாட்டான்.

17. சுமங்கலிக்குள்ள உயரிய கற்பு முதலிய நற்குணங்கள் யாவும் நாயகனைச் சார்ந்தே உண்டு. நாயகனில்லாத அமங்கலிக்கிக் குணங்களில்லை. மாயைக்குரிய சர்வ சத்திகளும், பரமாத்மாவை ஆஸ்ரயித்தே உண்டு. பரமனை யன்றி மாயைக்கு ஒரு குணமுமில்லை.

18. மாயைக்குரிய விசித்திர குணங்கள் யாவும் கூடி ஸ்திரீ புருஷ சரீரமிரண்டிலும் உன்னத நிலை பெற்றிருக்கின்றது. மற்றவைகளில் இவர்களிடத்திலிருக்கும் சக்தியைப் பார்க்கிலும் குறைந்துள்ளனவே யாகும்.

19. சகல ஆடம்பரங்களோடு அயோத்தியில் இருந்த போதும், யாதுமின்றி ஆரணியத்தில் வசித்தபோதும், இராமன் இராமனே யன்றி வேறல்ல. அக்ஞான சம்பந்த தேகாதிகளின் அபிமான காலத்தும், அவை நீக்கி தியாகியான போதும், ஆன்மா ஆனந்த வடிவமேயன்றி வேறல்ல. எப்போதும் முத்தன்.

20. ஜெகத் சொப்பனமென்று வாயால் வெட்கமில்லாமல் கூறிக்கொண்டிருக்க வேண்டாம். நடையில் அனுபவி. அப்படியே நடந்து பிறரிடம் தெளியச் செய்.

21. நெய்க்குடத்தில் எறும்புகள் சேர்ந்து நிற்றல் (மொய்த்தல்) போல, ஞானியின்பால் குணமெல்லாம் நல்லனவாக வந்து சேரும்.

22. மாயையைக் கடப்பது மனத்தைக் கடப்பதுதான் மனம் கடந்த தன்வடிவ ஆனந்தானுபவம் உண்டாயின் மனம் கடந்ததாம்.

Koviloor Digital Library

23. செடிகள் உணவோடு மனிதரது அன்பையும் விரும்புகின்றது போல, மனது ஞானத்தின் பொருட்டு தியானம், விவேகம், கடவுள், குரு இவர்களது கிருபை, இவைகளோடு வைராக்யம் என நிராசையையும் விரும்புகின்றது.

24. மூடனும், விஷயங்களை விட்ட வரையில் சுக முண்டென்று தெரிந்தோ தெரியாமலோ சொல்லுகின்றனென்றால் விவேகி எல்லாம் விடுவது, நல்லவற்றுளெல்லாம் நல்லதாகும்

25. "வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லையாண்டும் அஃதொப்பதில்" -(குறள்) ஒரு பொருளையும் விரும்பாமைபோலச் சிறந்த செல்வம் இவ்வுலகத்தினுமில்லை, எவ்வுலகத்தினுமில்லை.

26. வேடன் கையிலகப்பட்ட பக்ஷி தீனிக்கலைவதுபோல், போகத்தின் வசமானவன் ஆரண (வேத) நெறியில் செல்வதாகும்.

27. செல்வமுடையவனுக்குத் தரித்திரமில்லை: நல்மனைவி, நல்ல புத்திரருடையவருக்குக் குடும்பக் கவலையில்லை. சத்துருயின்றிய அரசனுக்குச் சஞ்சல மில்லை. கல்வியில் தேர்ந்தவன் சபையைக் கண்டு அஞ்சுவதில்லை. இவர்களுக்கும், இவர்களொழிந்த ஏனைய துக்கிப் பிராணிகளுக்கும், பிறப்பின் துன்பம், இறப்பின் துன்பம் ஜரையின் துன்பம். வயோதிகத்தின் சுபாவமான தளர்ச்சி மிகுதியான துன்பம் ஒருக்காலும் விட்டு நீங்காது; அனுபவித்தே தீரவேண்டும். இதற்கு இவர்களிடம் ஔஷதமில்லை.

28 மோக்ஷ காரியங்களில் ஒருவனுக்கு எவ்வளவு பிரதிபந்தங்களுண்டோ, அவ்வளவு பிரதிபந்தம் லௌகீக காரியங்களிலுமுண்டு. ஆனால், யாருக்கு எதில் அதிகப் பிரேமையிருக்கின்றதோ அதிலுண்டாகும் தடைகள் லேசாகத் தோன்றும்.

29. பாமரர்கள் நூல் கல்லாமலும், நல்லோர் கூட்டுறவில்லாமலும், தங்கள் நடையால் ஆசை அதிகத்தால் இச்சித்த பொருள் கிட்டுகிறதில்லையென்றும், கிட்டினாலும் அனுபவிக்க முடிகிறதில்லையென்றும் கூறுகின்றார்கள்.

Koviloor Digital Library

30. மரணத்தின் பின் இந்தச் ஜீவன் என்ன கதியடையுமென்று அனேகர் வினவுகின்றனர். இது அவ்வளவு நல்ல வினாவாகாது. தான் வாழ்ந்து வரும் இப்போதுசுகமாக வாழ நடையுடையவராய்க் கற்றுக் கொள்வது சாலச்சிறந்ததாம்.

31. கடவுள் சார்பற்ற குணமும், யோகமும், தியானமும் மணமற்ற மலர் போன்றது விஷயப்பற்றுடையவர் அரக்கர்; விஷயப் பற்றற்றவர் தேவர்.

32. நல்ல கருமங்களைப் பல பிறவிகளில் செய்து வந்தவனுக்குத்தான் தெய்வ சம்பந்தமான பக்தி திடப்படும். அவையில்வாமல் பக்தியில் திடமுண்டாகாது.

33. பசு, கருப்பானாலும் பால் வெண்மைதான், மனிதன் தாழ்ந்த ஜாதி யென்றாலும் அவன் உண்மை வடிவ ஆத்மா; பரமாத்மா தான். பேதம் குறைந்தால் தான் சுகம்.

34. நகரங்களுக்கு வெகு தூரத்திலுள்ள சிறிய கிராமங்களில் வாழும் ஏழை மக்களுக்கு, அதிகமாக உலக ஆடம்பரங்கள் தெரியாது. அதனால், அவர்கள் குறைந்த சிலவில் தங்கள் குடும்பங்களை நடத்துகின்றனர். அதற்கேற்ற வண்ணம் மனவமைதியுமிருக்கிறது. தியானம் செய்கின்றோம்! வேதாந்த தத்துவ விசாரம் செய்கின்றோமென்றவர்கள் அவ்வேழை மக்களைப் போல, தாழ்ந்த நடையில் ஈடுபடுவார்களாயின் சீக்கிரம் மனவமைதியடைவர்,

35. சராசரங்களில் காணும் சகல விசித்திரங்களும்; ஆன்மாவின் சத்தியின் அல்ப தேசத்தில் உண்டாகின்றனவென்பதை ஞானிஅறிகின்றான் அதனால் அவன்கலங்குகின்றதில்லை.

36. பேரின்ப நிலை யாதொரு பற்றுக்கோடு மின்றி இருத்தலால் அது என்றும் நித்தியமானது. மற்றவையாவும் பற்றுக்கோடு உடையன வாகலின் அவை யாவும் அழியும் நீர்மையனவாம்.

37. கரையற்ற சமுத்திரம் அளவுக்குட் பட்டதாயின், எப்பொருள்தான் அகண்டமானதாகும். யாவும் பரிச்சின்னங்

Koviloor Digital Library

களே. பரிச்சின்னங்கள் அழியும். அழிவதும் துக்கம் ஆனதால் ஆன்மனையொழிந்து யாவும் துக்கம். ஐயோ பாவம்!

38. ஒருவன் பொன்னுசை அடைந்த போது, கழுத்துக்குக் கயிறு கொண்டவனுனன். பெண்ணுசை கொண்ட போது, கயிற்றை முடிந்தவனுனன். மக்கள், வீடு முதலிய உலக லாசை கொண்ட போது, நன்ருகச் சுருக்கிட்ட உயிர்ப் பிணமாஞன்.

39. சாத்துவிகந்தான் மனத்தின் திண்மை. இதைச் சம் பாதிப்பது சாதகனுக்குச் சிரமந்தான், என்றுலும் உறுதி யான வரன்முறை கொண்டவர்களுக்குக் கஷ்டமில்லை.

40. தியானத்தின் மிகுதியால் மனம் இறைவனது திரு வருளைப் பெறுகின்றது. அதனுல் பெண்ணுசை, பொன்னு சையை விடுவது சுலபமாகின்றது.

41. ஆகாயத்தைப் பிசைவதால் பலனென்றுமில்லை. அத னேடு கைக்கு வலி மிகுவதுமாகும். அநித்ய உடல் வாழ்க் கையை சதமென்று அதன்வசம் சார்ந்து வாழ்பவனுக்கு, நல் பலனென்றுமில்லை. அவனேடு மனத்திற்கு நீங்கா கவலையே மிகும்.

42 உலகமெங்கும் நிறைந்து மறைந்துள்ள இறைவனது, அருட்சத்தி தியானமும், ஏகாத்முமாகிய இவைகள் எப் போதும் சேவிப்பவர்களுக்குத்தான் விளங்கும்.

43. கடவுளின் திருவருள் நோக்கத்திற்குப் பாத்திரனுன பிறகே, ஞான வழியில் பலன் தரும். எங்கும் பரந்து நின்ற இறைவன் மஹா பக்தனுக்கு அப்போது எல்லா இந்திரியங் களுக்கும் விளங்குகின்ருர்.

44. சிறு குழந்தையின் முன் தான் யாதொரு தின்பண்டமு மில்லாமல் அன்பு சுரந்த முகத்தோடு கையை நீட்டினுல் போதும்; குழந்தை சீக்கிரம் வந்து தாயைக் கட்டிக்கொள் ளும். ஆனுல், அன்பற்றவர் எவ்வளவு தின்பண்டம் வைத் துக்கொண்டு அறைகூவி அழைத்தாலும் வராது ஓடி விடும்.

Koyiloor Digital Library

இறைவனும் அன்புள்ள பக்தனொருவன் அவிழ்ந்த அன்போடு பணிந்து மனமாற அழைக்கின்றான், இருதயத்திலிருந்த வண்ணம், பக்தன் விரும்பியவண்ணம், ஆவிர்ப்பவித்து பரமமான சுகந்தருவன். அன்பற்றவர் எத்தனை ஆடம்பர பூசை செய்தாலும் அணுகவே மாட்டான்.

45. ''ஸ்ரீ பூஜ்யபாதாள் ஜயந்தி'' இன்றைய தினம்: அவரது திருவருளால் அவர் காட்டிய ஞான நெறி, பக்தி நெறி, கரும நெறி யாவை என்பதைக் கைக் கொண்டு வாழ்பவருக்கு எவ் வகையிலும் முக்தி உண்டு என்று கூறப்படும்.

46. ஒரு பாம்புப் பிடாரன் வீட்டில் எலி ஒன்று வளர்ந்து வந்தது. அந்த எலி வளர வளர பல் முதிர்ந்தபின் பாம்புப் பெட்டியை துளைசெய்து உள்ளே நுழைந்து உணவுப் பொருள்களைத்தேட ஆரம்பித்தது. மாறாக அங்குள்ள சர்ப்பத்தின் வாய்க்கு இரையாகி இறந்தது. குமாரப்பருவம் முதல் வளர்ந்து, யவ்வனப்பருவம் வந்தபின் விஷப் பாம்பைச் சுகமாகக் கருதி, அதைத் தேடி அலைந்து, அதனை அடைந்து, அதன் வயமாகி மாய்கின்றனர்: யாரோ ஒரு உத்தமன் விஷப்பாம்பின் வழி அடைகின்றதில்லை.

47. கடவுள் நிலையில் மனமாற நிறைந்து அனுபவித்த ஆனந்த மனம், வேறொன்றை நினையாததோடு வாக்கும் அதையே பேசும். இந்த நிலையை எப்போது மற்றையர் எய்துவர்!

48. ஜீவனைப் பரநிலையில் சேர்ப்பதுவே சரியான ஜீவ காருண்யமாகும். மற்றவை தாழ்ந்தவையும் சரியான ஜீவ காருண்யமாகாது.

49. என்னிடத்தில் உலகில்லை, சரீரமில்லை, யாவும் மித்தை சொப்பனம், நானே சுயஞ்ஜோதி, சுத்தானந்த அகண்டப் பொருள், எனத் துணிந்த தீரன் அவசியம் ஒழிந்து ஆனந்தமடைகின்றான்.

50. இனி அடுத்த க்ஷணத்திலும் நமக்கு ஆகவேண்டிய காரியமில்லை, ஒரு பொருளும் வேண்டியதில்லை, என்று எப்போது

Koviloor Digital Library

உண்டாகின்றதோ அப்போது மனம் அடங்கிவிடும், அதுவே சமாதியாகும்.

51. உழைத்தவன் உடல் உறுதி பெறுகின்றது. மனதில் நின்று வருத்தி வாசனையை விட்டவன் புத்தி, திடமாக ஆனந்தத்தில் அழுந்துகின்றது.

52. ஜீவர்கள் அகண்ட பொருளானதால் அவரவர்கள், அஞ்ஞான திசையிலும் ஓர் அகண்டமான இடம், பொருள் ஏதேனும் ஒன்றைக் கண்டால், வெகு சந்தோஷம் கொள்ளு கின்றனர். இதனுல், இயற்கையிலேயே அகண்டம் ஆனந்தம் தனது நிஜ சொரூபமாகின்றது அல்லவா? இன்று ஆண்ட வர் குருபூஜை தினம். ஆண்டவரது வைராக்யமும், ஞானப் பயிற்சியின் திடத்துவமும், உறுதியாக நிற்றலும் அப்பெரியா ரது நாள் கொண்டாட்டத்தால் நாமும் கொண்டு முன் னேற்ற மடைவோமாக.

KOVILOOR MADALAYAM
KOVILOOR 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE) -436846)

53. தினந்தோறும் கண்ட காக்ஷியும், உண்ட போகமும், எக்காலமும் அருவருப்பின்றி, அனுபவித்துவரும் ஜீவர்களுக்கு சித்தம் தூய்மையடையின் அவ்வளவும் மாற்றமடைகின்றன

54. பலவகைக் காரியங்களில் ஈடுபடாமலும், ஒன்றிலே நின்று நன்ருக வேலை செய்வதாலும் மனம் நல்ல பயிற்சி பெறுகின்றது. ஆனுல், இலக்ஷியத்திற்கேற்றபடி பயிற்சியும் பலன் தருகின்றது.

55. பூரண திருப்தி, ஆன்மாவில் ஒழிந்து மற்றையதில் உண்டாகாது. இது நிச்சயம்.

56. காலங்களுக் கேற்ப மனம் பல விகாரமடைகின்றது. ஆனுல் ஆகாரங்களை ஒழுங்காகவும், லேசாகவும் புசித்து வந்தோமானுல் சத்வ ஆகாரங்களால் எல்லாக் காலமும் நல்ல பயிற்சிக் குறியதாகும்.

57. பாமரர்களுக்கு விஷய போகங்களில் பிரியம், பண்டி தர்களுக்கு விசித்திர கவிகளில் பிரியம், பக்தர்களுக்குப் பக வானது கல்யாண குணங்களில் பிரியம், ஞானிகளுக்கு ஒன்றி லும் பிரியமில்லை. தான் ஏகன் என்பதால்!

58. தலை குனிந்து வணங்கல், கை குவித்து வணங்கல், கீழ் விழுந்து வணங்கல் முதலிய எல்லாவற்றினும் மனமாரப் போற்றி, மிக்க பிரேமையோடு தந்தையாகிற அருட்பெரும் வள்ளலென்று அவிழ்ந்த அன்பு கொண்டவருக்கு இறைவன் சீக்கிரம் அருள் புரிகின்றார்.

59. மனத் தளர்ச்சியுள்ளவர்களுக்கு ஒரு நன்மையும் கிட்டாது. துக்கமே பலன். தினந்தோறும் ஏதேனும் ஒரு வேலையில் 2 மணிநேரம் பேசாமல் மௌனமாயிருப்பது மிக்க நலன் தரும். மனத்தின் நிவிருத்தியே மாயையின் நாசம். மனத்தின் பிரவிருத்தியே மாயையின் இருப்பாகும்.

60 தூக்கங் கெட்டவன் சோம்பலால் மயங்குவது போல, விஷயசுகத்தில் புத்தி கெட்டவன், அதாவது ஞான திருஷ்டியில் நிலை பெற்றவன் ஞான போதையால் ஓர் ஓர் கால் உலக விவகாரத்தில் மயங்குவன்.

61. வளைந்த பனைகள் நன்றாக வளைந்து நிற்கவில்லையானால் கூட்டத்தில் வளைத்துக்கட்டி வைப்பது போல, அதிகாரியால் அடக்கிய மனம் நன்றாக அடங்க வில்லையானால், பரமேஸ்வரனது திருவடியாகிய கூட்டத்தில் அம் மனதைக் கட்டி மிகப்பணியவைக்கின் அடங்கும்.

62. புத்த பகவான் உயர்ந்த ஞானியும் விரக்த புருஷனுந் தான். அவரது மரபினர் பின்னாளில் அனுவசியமான புரட்சியை கிளப்பி உண்மையைக் கெடுத்து விட்டனர்.

63. மரங்களின் பல பாகங்களிலும் பழங்கள் எவ்வளவு குறைந்த பாகமோ அது போல, உலகத்தவரில் ஞான வழிச் செல்பவர் குறைந்த அளவே ஆகும்.

64. அசுர சுபாவத்தால் சிலர் விரக்தர் போலவும், ஞானிகள் போலவும் காணப்படுகின்றனர். ஆனால், அவர்களது அந்திய பலன் சாம்பலில் உள்ள நெருப்பின் உஷ்ணம் போல் கெடுகின்றது.

65. ஞானி ஒருவன் வியாதி, மரணம் இவைகளை அன்பன் எனக் காண்கின்றான்.

Koviloor Digital Library

66. ஞானியின் சகவாசம், கனி நிறைந்த மரங்களும், நற்சுவை ஜலம் நிறைந்த தடாகமும், பசும்புல் நிறைந்த பூமியும் குளிர்ந்த காற்று வீசும் நந்தவனத்திற்கு ஒப்பாகும்.

67. கண்ணுடியின் அழுக்கு, பிரதி விம்பத்தைப்பெறுது. மனமும் விஷய இச்சையுடையதாய் இருக்கும்போது ஆன்மானந்தத்தைப் பெறுது. விஷய ஆசை விட்டபோது அதாவது இச்சித்த விஷயம் கிடைத்த பின் அதன் ஆசை நீங்க, சுத்த கண்ணுடியில் பிரதி விம்பம்போல ஆன்மானந்தம் மனதில் பிரதி விம்பிக்கும்.

68. ஆசை யுள்ளவனுக்கு, எல்லாம் மயக்க உணர்வாகவே இருக்கும். ஆசை நீங்கினவனுக்கு யாண்டும் தெளிந்த தரிசனமேயாகும்.

69. ஞானியின் சத்துவ மனம், மணற்கேணி ஜலம் போன்றது. மூடனது ஆகந்துக சத்துவ மனம், மண் நிறைந்த கேணியின் தெளிந்த ஜலம் போன்றது.

70 பயிரின் வளப்பத்திற் கேற்ப பலனுண்டு. மனிதனது மனத்தின் குணத்திற்கேற்ப வாழ்க்கையில் பலனுண்டாகும். ஆனதால், மனிதன் சத்தியத்தை நாடுவது உண்மை வழி.

71. நங்கூரம் போடப்பட்ட படகு, எவ்வளவு தள்ளினுலும் அசையுமே தவிர குறித்த மார்க்கம் செல்லாது, ஆசையில் அழுந்திய மனம் ஞானவழியில் எவ்வளவு முயற்சிக்கப்பட்டாலும் குறித்த பேரின்ப வாழ்க்கையை அடைய, நன் மார்க்கமாகிய சமாதி முதலிய வழியை பின்பற்றுது.

72. நற் சீலரான மஹான்களுக்கு எங்கும் எப்போதும் பரமானந்தம். திறந்த வெளியில் வைத்த தீபம் போல் சதா விஷய பரிணமமுடைய மனம் ஆன்மாவில் நிலைக்காது.

73. பேரின்பச் சுவை கிட்டாது. பேரின்பச் சுவை அடைந்தவனுக்கு உலகச் சுவை வேண்டியதில்லை.

74. அந்தக் கரணத் தூய்மை, பேரின்பம் விளையுமட்டும் வேண்டும். கரணத் தூய்மை இறைவனது தியானம், ஜபம், பிரார்த்தனை இவைகளால் அவசியம் உண்டாகும்,

Koviloor Digital library

75. மனவழுக்கு வெறும் மௌனத்தால் போகாது. இடைவிடாமல் தியானத்தைச் செய்தால் போகும்.

76. இப்போது யுத்தம் என்று கேட்டு திடுக்கிடுகின்றவர்கள், சரீரம் நான் என்று அபிமானத்தால் அல்லவா அலறுகின்ருர்கள்? பாவம் என்ன செய்வார்கள்!

77. தெய்வச் செயலை உள்ளபடி தன் கண்ணும், பிரவற்றின் கண்ணும் காணும் புருஷன் மஹாத்மா ஆகின்ருன்.

78. பெண் காதல் மிகக் கொடியதென, நூல்களும், பெரியோர்களும் நிறைய கூறுகின்ற வழியை நன்கு கண்டவன், ஞான வழியில் செல்லும் பிரம்மசாரி ஒருவன்தான். மற்றையரெல்லாம் பேச்சளவிலேயே பேசி முடிப்பார்.

79 மரணமும், பிறப்பும், நோயும், வாட்டமும், பூரிப்பும் வளர்ந்தாலும் குறைந்தாலும் சரீரத்தின் இயற்கை தருமமென்று உணர்ந்தால், பின் இதனுள் சுகமேது? எல்லாம் துன்பமயமே ஆகும்.

80. உலகத்தோடு ஒத்துழைக்கும் அன்பன் நாட்செல நாட்செல தெய்வத்தோடு ஏகனுகின்ருன். உலகம் என்பது உயர்ந்தோர்!

81. அகங்காரமாகிய பெரிய யானை, சமாதியாகிய பெரிய குழியிலன்றி, வேறு உபாயத்தால் அடங்காது.

82. இன்று நடராஜப்பெருமான் திருநடனக்காக்ஷி. ஆனுல் என்றும் நடிக்கும் அவன் கோலம், ஆனந்தமென தமது இருதய சபைக்கண் காணுத மனிதரை என்னென்று உரைப்பது?

83. பூரண சுதந்தரம் உடையவன் பரமான்மா என்பதை உள்ளபடி ஜீவன் உணர்ந்து விட்டால், எப்போதுதான் அகந்தையற்று பேரின்பப் பேற்றையே கைக் கொள்ளுவான்.

84. கார் இருள் இரவிலும், தான் சுயம் பிரகாசமாக விளங்கியும் அதனை அறியாது மயங்கும் அவிவேகிகளை என்ன என்னென்பது?

Koviloor Digital Library

85. ஜலமே இல்லாவிட்டாலும், அதிக ஜலம் விட்டாலும் பயிர்கள் நாசமடைகின்றன. மனிதன் உணவு இல்லாவிட்டாலும், அதிக உணவு உட்கொண்டாலும் நாசம் அடைகின்ருன். ஆனதால், இதமும் மிதமுமான ஆகாரத்தை உட்கொண்டால், சரீர நலம், மன நலம் இரண்டும் நன்ருய் இருக்கும். அதனுல் அப்பியாசம் செய்ய நலமாகும்.

86. மலர், மணம் மாறும்போது துர்வாசனே வீசும். மனம் நற்குணங்களே விட்டபோது தீய குணங்களேக் கைக் கொள்ளப்பார்க்கும். ஆனுல், நல்லோர் நற்குணங்களே விடவே மாட்டார். விட்டாலும், தீய குணங்களே எள்ளளவும் கொள்ளமாட்டார். பிள்ளேப் பூச்சியைப் போல இருப்பார்.

87. கற்கண்டு எத்தனே வகையாக மாற்றப் பட்டாலும், தன் தீஞ்சுவையை விடாது. ஞானிகள், எவ்வளவு பிறரால் துன்புறுத்தப் பட்டாலும், அவர்கள் எல்லா வகையாலும் பிரஹ்மானந்த களிப்புடையரே ஆவார்.

88. சுகம் தன் வடிவமென்றும், மற்றைய மன முதலியவைகளில் பிரதி பிம்பித்துக் காணப்படுகின்றது என்று தெரிந்தால், பின் மனம் பூரண நிராசையைப்பெறும் இன்பம் மிகும்

89. தூல உடல், சூக்கும உடல் இரண்டும் பந்த ஏதுவானுலும், தூல உடல் அபிமானமே மகா துக்கம். தூல உடல், அபிமானம், நீங்குமாயின் நட்டு எடுக்கப்பட்ட போல் ஆணியைப்போல் அகந்தை முதலிய சூக்கும தத்துவங்கள் தானே நின்றுவிடும்.

90. பெண், பொன் இரண்டபிமானத்தின் துக்கம் மகாக் கொடியது. இவ்விரண்டிற்கும் சமானமான கொடிய பொருள் வேருென்றின்று. இவைகளை விட்டவனுக்குண்டாகும்பேரின்பத்திற்கு சமானமான சுகமும் வேருென்றின்று

91. மனத்தில் சர்வத்திலும் போது மென்று உண்டாகும் உபசாந்தியே மஹா செல்வம்.

92. யாவும் சின்மயம் தன் வடிவமென அனுபவிப்பவனுக்கு இராகத் துவேஷம் உண்டாகாது.

Koviloor Digital Library

93. உடலில், உலகில் என்ன மாறுதலுண்டானாலும், நீ என்றும் ஒரு தன்மையனானவன் நான் என்று பாறையைப் போல் திடமாயிரு. இறைவன் எல்லாம் தனது திருவுள்ளப் பாங்கின்படி நடத்துவான்.

94. மனதை ஆன்மா அல்லது பரமேஸ்வரன் இவ் விரண்டில் யாதேனும் உன் பக்குவத்திற் கேற்ற ஒன்றில் நிலைக்கச் செய். இதுவே தானம். இதுவே தவம். இதுவே சுகம்.

95. ஞானிக்கு மாத்திரம் ஆயுள் புல்லின் நுனியிலுள்ள பனித்துளி யொத்தது என்று தெரியும்.

96. மனிதன், சர்வசக்தியும் வாய்ந்த ஒரு பொக்கிஷமானவன், ஆனால் அவ்வளவு சக்தியையும் பெண், பொன் என்ற இரண்டில் திணித்து நிலை குலைகின்றான்.

97. சகலமும் மாயா மயம் எனத் தேர்ந்த மனதுக்கு எப்போதும் ஆனந்தந்தான்.

98. ஜலத்தில் சுற்பூரம் போன்ற சுத்த பதார்த்தங்கள் சேர்ந்தால் புழுக்கள் கெடும், சாணம் போன்ற மலினப் பொருள் விழுந்தால், அசுத்தப் புழுக்கள் உண்டாகும். மனதில் ஆன்ம வாசனை உண்டாகிவிடின், அசுத்த வாசனை மாண்டு விடும். ஸ்திரி, தனஆசை உண்டாகி விடின் அசுத்த அந்தக்கரணமாகி மகா துக்காலயமாகி விடும்.

99. ஒருவனை ஏழை மக்கள் பசியின் கொடுமையாலும், வியாதியின் மிகுதியாலும், சாரமற்ற ஒருவகை மண்ணைத் தின்று உடலை அடியோடு வியாதி மயமாக்குகின்றார்கள். பணம் படைத்தவர்களில், சிலபேர் பணவாசையின் மிகுதியால் சாரமற்ற தூர்த்தரைச் சினேகராக்கிக்கொண்டு அவர்கள் கொண்ட போகங்களையும் சுகமெனக்கருதி மயங்கி, அதனால் சகல புருஷார்த்தங்களும் இழந்து, தங்கள் அருமைத் தோழனான பணத்தோடு மடிகின்றனர். பாவம்! இவர்கள் எப்போது துக்கத்திளின்று வெளியேற முடியும்?

100. முள் மரத்தின் நிழல், நிழலாகிக் குளிர்ச்சி தந்தாலும் அங்குநின்று செல்பவர் கால்களில் முள் தைக்காமலிருக்காது.

Koviloor Digital Library

செல்வம் சுகம் போன்றதாயினும், செல்வம் சுகம் அன்று எனச் சொல்பவருக்கும், அல்லது கருமம் முடிய செல்வம் விட்டவருக்கும், மனத்தின் கவலையைப் பெறுக்கும்.

101. பசித்த நற்காலத்தில் உண்ட நல் உணவு உடலில் நல் ரசமாதல் போல, மோக்ஷ தாகமுடைய நல்ல உத்தம முமுக்ஷுவின் மனத்தில் நல்ல ஆசாரியர் செய்த உபதேசம் அவசியம் ஞானம் உதயமாகி மோக்ஷானந்தம் பிராப்தமாகும்.

102. எல்லையற்ற ஆகாசமும் நக்ஷத்திரங்களும் தன் கண் ஏகதேசமெனக் கண்டவனுக்கு யாதும் விசித்திரமல்ல.

103. கற்பகத்தருவும் காமதேனும் காமிகளுக்கு மிக சிரேஷ்டமானது என்கின்றனர். ஆனுல், அதனுல் அடையப் பட்ட சுகம் இந்திரனுக்கும் சாசுவதமாக இல்லையென்று சுருதிகளால் அறிகின்ருேம். ஆதலால், இவ்வுலகப் பொருள் பெண்ணினும் விசேஷமொன்றும் காணவில்லை. இவ்வுலக விஷயம் துக்கமாக முடிவது போல அவ் வுலக விஷயமும் துக்கமாகத்தான் முடிகின்றன. இவ் வேதுவால் விவேகிகள் யாண்டும் எவ்விடத்தும் விஷய போக இச்சை கொள்ளார் கள். நிராசையை விரும்புவார்கள்.

104. மதுரப் பொருள் எல்லாம், ஆன்ம லாபம் பெற்ற வனுக்கு மதுரமாக இருப்பதில்லை.

105. பொற்பாண்டம் உடைந்தால் பொன்னுகும். மண் பாண்டம் உடைந்தால் என்ன ஆகும்? ஞானிகள் செல்வ வளம் கெட்டாலுல் ஞானிகளே யாவர். அஞ்ஞானிகள் செல்வ வளம் கெட்டால் என்ன ஆகும்?

106. மண் சுவரை எவ்வளவு ஜலம் விட்டலம்பினுலும் மண் மண்ணுகவேதான் இருக்கும். வேறு பளிங்காகாது. மூடனுன அஞ்ஞானிக்கு எத்தனை ஞானுேபதேசம் செய்தா லும் அவனது மடமையும் இராகமும் விலகாது.

107. உள்ளதை உள்ளபடி அறிவது ஞானத்தின் இயல்பு. பிறழ்ந்து உணருவது அஞ்ஞானத்தின் இயல்பு.

108. மனிதருக்கு அழகு, ஞான நூல் அறிவு பெறல். கற்ற

Koviloor Digital Library

தன் அழகு, ஒழுக்கமுடையவனுதல். ஒழுக்க முடையவனுக்கு அழகு, தனித்திருத்தல். தனித்திருப்பவனுக்கு அழகு, மனதை என்னேரமும் ஆன்மாவில் நிலைபெறச் செய்வது. நிரந்தர தியானிக்கு அழகு, பரமானந்த பரமசீதள தன் வடிவாக ஆதலாகும்.

109. மன வழுக்குள்ளவர் செய்யும் பாகிய (வெளியே) ஆந்தர உள்ளே பூசைகளைக் கடவுள் ஏற்கார். மன வழுக்கற்றவர் அவ் விறைவனது உயரிய திருநாமங்களை இரண்டொரு தடவை அன்போடு ஓதினுல் போதும். இது பரமேஸ்வரனுக்குப் பரம திருப்தியைச் செய்யும்.

110. மனிதர் தாமதம் நிறைந்தபோது, கிருமி கீட சுபாவமடைகின்றனர். இராசதம் நிறைந்த போது, மிருக சுபாவமடைகின்றனர். சாத்துவிகம் நிறைந்த போது, தெய்வ சுபாவ மடைகின்றனர்.

111. பூமியின் கீழிருக்கும் சொர்ண அணுக்கள் தம்மையாருக்கும் பிரசாரம் செய்வதில்லை. அடங்கிய குண சாதுவானவன் தன் ஞானத்தை பிரசாரம் செய்யவேண்டியதில்லை

112. மிருதுவான பஞ்சணையிற் படுத்துறங்குபவர், கடினமான இலௌகீக விஷயங்களை மனத்திற் கொண்டு அல்லல் படுகின்றனர். கடினமான மண் கல்லுகளில் படுத்துறங்குபவர் அலௌகீக பரமானந்த ஆன்ம நிலையில் என்றும் மனதை நிலைபெறச்செய்துள்ளவர் எப்போதும் சுக வாழ்க்கையுடையவராவார்கள்.

113. பெண்ணுசையை விட்டவன்பேரின்பம் அடைகின்றுன் பொன்னுசையை விட்டவன் புதிய மனிதனுகின்றுன். ஒரு ஆசையும் இல்லாது விட்டவன், ஒப்பற்ற புருஷனும் உவமையற்ற சுகசொரூபனுமாகின்றுன்.

114. அப்பியாசி என்பவன் முடியவில்லை என்றும், முடியாது என்றும் கனவிலும் எண்ணக் கூடாது. உலக காரியங்கள் வேண்டுமானுலும் முடியாது போகலாம்! மோக்ஷ காரியம் ஒருக்காலும் முடியாததல்ல.

Koviloor Digital Library

115. உடலில் அதிக உணவும் திமிருமுடைய நெஞ்சத்தினர்க்கே காம இச்சை மாதர் மேலுண்டாகும். அங்கனமே மாதருக்கும் ஆடவர்மேல் உண்டாகும். ஆகாரக் குறைவும் அகங்காரக் குறைவும் உண்டாகும்போது, தானே காம இச்சை விலகும். ஆனாலும் பேரின்பச் சுவை யுண்டவருக்கே காம இச்சை அடியோடு விலகும்.

116. கல்வியினும் உயர்வு ஒழுக்கம். ஒழுக்கம் உடையவன், உண்மையை அவசியம் தேடுவான். உண்மை புத்தியுடையவன் அவசியம் மோக்ஷமடைவான்.

117. பெண் மயக்கம் ஒழிந்தவர்கள், பொன்மய மனமுடையராவர். அவர்கள் உள்ளந்தான் எப்போதும் சாந்த சுகம் பெறும். தியானமென்னும் உயரிய சாதனம் அவர்களுக்கு நல்ல பலனைத் தரும்.

118. செல்வர்களுக்குச் செல்வம்போல் தியாகிகளுக்கு மனத்தின் தூய்மையே பரம செல்வம்.

119. சிவன், விஷ்ணு, பிரம்மா, சத்தி, கணேசன், முருகன் சூரியன் என்பன யாவும் ஒரே இறைவனது நாமங்களேயாகும் ஒன்றென அறிபவர் உய்வர். பலவென அறிபவர் பொய்யர்.

120. ஆத்மாவிற்கு ஆனந்தம் சுபாவம். உலகத்திற்குத் துக்கம் சுபாவம். மனம் எதை பற்றுகிறதோ அந்த நிலையைப் பெறும்.

Koviloor Digital Library

சிவமயம்

13 - தீயகுணங்களின் இலக்கணமும், இதனுல் கெட்டவர்களும்.

நாகநிகர் அல்குலே விரும்புவது இராகமாம் நயமில்
அபகாரம் துவேஷம்
நாடுபொருள் விக்கினரைப் பகைப்பது குரோதமாம்
நாநா விதாசை காமம்,
மோகமது மகஞதி வஸ்துமேல் பிரியமாம் முறையின்
ஈயாமை லோபம்
மொழிமதம் கிர்த்தியா கிர்த்தியம் தெரியாமை
முதன்மையாய் ஒருவன் வாழில்,
வேகமாய் அவனேயே சகியாமை மாச்சர்யம்
வெப்பமாம் துக்கம் வந்தால்
வேருெரு வருக்குவர எண்ணுகிறது ஈரிஷை மேலான
சுகம் அடைந்தால்,
தாகமாய்ப் பிறருக்கு வரவொணுதது அசூயை
தனேமெச் சலேயி டம்பம்
தர்பமது பெரியவன் தானெனல் அகங்கரம்
தன்பிடி விடாத பிடியே.

பரதாரம் விரும்புஇரா கத்திஞல் இராவணனேப்
பலர்அறிய இராமர் கொன்ருர்
பாரில்அப காரம்செய் துவேஷம்கொள் இரணியனேப்
பன்னுநா ரணர் அழிந்தார்,
சுடர்மாது அனேகரைக் காமமொடு பிடிநரக சூரனேக்
கிருஷ்ணர் கொன்ருர்
துய்த்துணவு விக்கிவீ மன்மேல்கு ரோதபக சூரனே
வீமர் கொன்ருர்,
கிரமமாய்த் துரியோத னன்கொடா லோபத்தால்
கீர்த்தியுறு வீமர் கொன்ருர்
கெம்பீர ராமர்மேல் மோகங்கொள் தசாதர்
கீழ்விழுந்து இறப்பதாஞர்,
விரிதான ஐசுவரிய மதத்திஞ லேகார்த்த வீரியார்ச்
சுனன் வீட்டினில்
மேவிவரு நாரதர்க்கு உபசரி யாததால் மென்பரசு
ராமர் கொன்ருர்.

Kovilloor Digital Library

சிசு பாலன் மேலெனவுமக்காரம் கொண்டதால் செருக்கறக் கிருஷ்ணர் கொன்ருர் சேர்ந்த நோயப் பிறர்உற ஈரிஷை- கொள் அருணுட்சன் சிரம்வாணு சூரர் கொன்ருன், நசிபவுண் டரிகவாசு தேவன்கொள் அசூயையால் நல்வாசு தேவர் கொன்ருர் நபூரவன் யாகமது டம்பமொடு செய்த- தால் ஞானதுரு வாசர் கொன்ருர், ஐசுவரிய மிகுதியால் தர்ப்பம்கொள் சதகந்தரன் அழிவுறச் சீதை கொன்ருள் அகங் கரம் கொண்ட மதுகை டவர்கள் நாசமுற வளிவிஷ்ணுவே அழிந்தார், விசுவாச மாகவே முத்தியை விரும்புநன் மெய்- யடியார் என்றும் நீக்கி விட்ட இப் பதிமூன்று குற்றமது அகற்று வோர்மெய் வீடுசேர்ந்து உய்வரே.

அரும்பத உரை.

விக்கினர் = தடுப்பவர், கிருத்தியா கிர்த்தியம் = செய் யத்தக்கன செய்யத்தகாதன, முறையின் ஈயாமை = சாஸ்திர உத்தமாகதருமம் செய்யாதிருத்தல், மாச்சர்யம் = பொருமை சுரர்மாது = தேவலோகப் பெண், மச்சரம் = பொருமை, சகியாமை, வாசுதேவர் = வசுதேவர் புத்திரர் (கண்ணன்)

நல்ல குணங்கள்.

1. பிறனில் விழையாமை 2. உதாசீனம் (விருப்பு வெறுப்பில்லாத நடுவு நிலை) 3. சகிப்புத் தன்மை 4. (ஊழ் வழி) கிடைத்ததில் திருப்தி 5. ஊழ்பற்றி ஆராய்தல் 6. (சாஸ்திர முறைப்படி) ஈதல் 7. வேதத்தில் கூறும் விதி விலக்கு ஆராய்தல் 8. பொருமையின்மை 9. அன்பு 10. அருள் 11. சரீரத்தை நான் என்னும் புத்தி இல்லாமை 12. நிஷ்காம கர்மம். நிஷ்காம உபாசனை 13. பணிவு மாதா பிதா குரு தெய்வ பக்தி முதலியன கொள்ளத் தக்கன

கெட்ட குணங்கள் தள்ளத் தக்கன ஆம்.

பயன் : அந்தக் கரண சுத்தி வாயிலாக சர்வதுக்க நிவிர்த்தி, பரமானந்தப் பிராப்தி. பரம சாந்தி.

குறிப்பு : ஷை 3 பாடல்களும், எங் குருநாதர் கோவிலூர் மடம் 8வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர ஞான தேசிக சுவாமி அவர்களால் 1965ம் ஆண்டில் வெளியிடப்பட்ட "சீடாசாரம்" என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.

கோவிலூர் மரபு

தவத்திரு. சோம. கோபால சுவாமி,

ஆனந்தாஸ்ரமம், குமாரபாளையம்.

Koviloor Digital Library

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி யெனை ஆண்ட
அத்தனெனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 1

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்றன் கூத்தையெனக்கு
அறியும்வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே 2

செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்றான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
அம்மையெனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 3

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீர் அடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்

அன்னவரே யெங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்.

பயமும் - அபயமும்.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: [illegible]-436646)

போக ரோக பயம் குலே சயுதி பயம் வித்தே ந்ருபாலாத் பயம், மானே தைன்ய பயம் பலேரிபு பயம் ரூபே ஜரா பயம், சாஸ்த்ரே வாத பயம் குணே கல பயம் காயே க்ருதாந்தாத் பயம், சர்வம்வஸ்து பயான் விதம் புவிந்ருணும் வைராக்ய மேவா பயம்.

போகம் (மிகுதியால்) வியாதி வரும் பயம், குலப் பெருமை, குலத்தார் சிறுமையில் கெடும் பயம், செல்வம் ஈட்டலிலும் காத்தலிலும் செலவினத்திலும் வரும் பயம். மானஸ்தனுக்கு மானம் போகுமோ என்ற பயம். பலசாலிக்குத் தன்னின் பலவானால் பயம், அழகு, கிழத்தனத்தால் கெடுமே என்ற பயம். சாஸ்திர பண்டிதனுக்கு மிக்க பண்டிதன் வாதம் செய்தால் தோற்போம் என்ற பயம். குணவானுக்கு கலகங்களில் கலக்கக் கூடாதே என்ற பயம். தேகாபிமானிக்கு மரணபயம். ஆகவே இவ்வுலகில் அனைத்து வியவகாரங்களிலும் பயமே உள்ளது. ஆனால், ஆத்மா அனாத்மாவைப் பற்றிய விவேக வைராக்கியம் உடையவனுக்கு மூன்று உலகங்களிலும் சிறிதுகூட பயம் இல்லை. அபயமே.

பத்ருஹரி வைராக்கிய சதகம்